செய்தி வெளியீடு எண். 56-2017 நாள்: 21.10.2017

# விழுப்புரம் மாவட்டப் பகுதிகளில் நடைபெற்று வரும் டெங்கு கொசு ஒழிப்புப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

*****

விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் டெங்கு கொசு ஒழிப்புப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.10.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, சுகாதாரத்துறை இணைந்து டெங்கு கொசு ஒழிப்பிற்கென மாவட்ட நிர்வாகம் சார்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்களின் நேரடிப் பார்வையில், டெங்கு கொசு ஒழிப்புப் பணிகள் தினந்தோறும் நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் சின்னசேலம் பேரூராட்சிக்கு உட்பட்ட தெற்குத்தெரு, தண்டல்காரன்தெரு, கடைவீதி, மூங்கில்பாடி தெரு, விஜயபுரம் மற்றும் விஜயபுரம் மேற்குப் பகுதிகளில் நடைபெற்று வரும் டெங்கு கொசு ஒழிப்புப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். இந்த ஆய்வில், ஒவ்வொரு வீடாக சென்று தண்ணீர் தொட்டிகளில் கொசுப்புழு உள்ளதா என பார்வையிட்டு, ஆய்வு செய்தார். கழிவுநீர் வாய்க்கால்கள், தேவைற்ற பொருட்களான பழைய டயர், மண்பாண்டங்கள், பிளாஸ்டிக் பொருட்கள், தேங்காய் ஓடுகள், ஆட்டுஉரல்கள் ஆகியவற்றில் நீர் தேங்கி உள்ளதா எனவும், நீர் தேங்கி இருப்பின் அவற்றில் கொசுப்புழுக்கள் உள்ளதா எனவும் ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது, கடைவீதியில் அமைந்துள்ள தனியார் புகையிலை நிறுவனத்தில் சுகாதாரமற்ற முறையில் உள்ள கழிவுநீர் வாய்க்கால்கள் மற்றும் தேங்கியுள்ள நீர்களில் கொசுப்புழுக்கள் அதிகம் உள்ளது கண்டறியப்பட்டது. இக்கழிவுநீரை உடனடியாக அகற்றவும், நிறுவனத்தை சுத்தமாக பராமரிக்கவும் அந்நிறுவனத்திற்கு உத்தரவிட்டார். மேலும், அந்நிறுவனத்திற்கு சின்னசேலம் பேரூராட்சி மூலமாக ரூ.25,000/- அபராதம் விதித்து நோட்டீஸ் வழங்க, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்.

தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல் குறித்தும், டெங்கு கொசு ஒழிப்பு குறித்தும், விழிப்புணர்வு ஏற்படுத்தினார். பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் பகுதியை சுத்தமாக பராமரித்தாலே டெங்கு காய்ச்சல் போன்ற நோய்கள் வராமல் தடுக்க முடியும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மல்லிகா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.அண்ணாமலை, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திருமதி.ஜீஜாபாய், சின்னசேலம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.தெய்வீகம், சின்னசேலம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர்.சுகுனா மற்றும் ஊரகவளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, வருவாய்த்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.